


**24. 10. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. இளையோரின் திறனே நம் நாட்டின் வலிமை என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி ரோஜ்கர் வேலைவாய்ப்பு முகாமில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் 112 பேருக்கு பணிநியமன ஆணைகளை மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி, இன்று வழங்கினார்.

2. சென்னை அடையாறு முகதுவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.

4. தென்கிழக்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகியுள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. வியன்னா ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**Rozgar Mela**

இளையோரின் வலிமைமிகு திறனே நம் நாட்டின் பலம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 17-வது கட்ட தேசிய ரோஜ்கர்மேளா, மத்திய அரசு பணியிடங்களில் வேலை வாய்ப்பிற்கான பணிநியமன ஆணைகளை, 51 ஆயிரம் இளையோருக்கு வழங்கும் திட்டத்தை காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அனைத்து துறைகளிலும், தன்னம்பிக்கையுடனும், தொலைநோக்கு பார்வையிடனும் நாம் வேகமாக முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள இளையோரின் கனவுகளை நனவாக்கும் தளமாக வேலை வாய்ப்பு முகாம்கள் திகழ்வதாக கூறிய அவர், ரோஜ்கர்மேளா வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் மட்டுமே 11 லட்சம் பேருக்கு பணி நியமன ஆணைகள் கடந்த காலத்தில் வழங்கப்பட்டதாக கூறினார்.

இளையோரின் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை உறுதி செய்யும் வகையில் உலக நாடுகளுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பதாக அவர் கூறினார்.

இதன்மூலம் முதலீடுகள் அதிகரித்து ஸ்டார்ட் அப் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ஆதரவு பெருகும் என்றார்.

இதனால் ஏற்றுமதி பெருகி உலகளாவிய திட்டங்களில் இளையோருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின்போது மூன்றரை கோடி இளையோருக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்யும் வளர்ச்சி அடைந்த பாரத திட்டத்தையும் பிரதமர் துவக்கிவைத்தார்.

திருச்சியில் ரயில்வே, அஞ்சல், மத்திய தொழில் பாதுகாப்பு படை, விமானத்துறைகளில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்ட 112 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 25 பேருக்கு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி, ஆணைகளை இன்று வழங்கினார்.

அமைச்சரிடமிருந்து நியமன ஆணைகளை பெற்ற இளையோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**வாய்ஸ்**

**கோவையில் மத்திய எரிசக்தி துறை இணை** அமைச்சர் ஸ்ரீபத் யசோ நாயக் 51 பேருக்கு பணிநியமன ஆணைகளை அளித்தார்.

**மதுரையில் தபால், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,** மத்திய ரிசர்வ் காவல்படை, தேசிய தொழில்நுட்ப கல்வி கழகம் ரயில்வே துறைகளில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்ட 60 பேருக்கு பணிநியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டன.

நாடுமுழுவதும் 40 இடங்களில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் இளையோருக்கு பணிநியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டன.

**********

**பீஹார்**

பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 6ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரத்தை பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி இன்று தொடங்கிவைத்தார்.

சமஸ்திப்பூர் மாவட்டத்தில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களின் பலன்களை மக்கள் அனைவரும் பெறுவது குறித்து பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

ச்சத்பூஜா விழா நாளை தொடங்க உள்ள நிலையில் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர், பீஹாரில் தேசிய ஜனநாயக கூட்டணி மகத்தான வெற்றியை பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜூன கார்கே வரும் 27ஆம் தேதிமுதல் பீஹாரில் வாக்குகளை சேகரிக்கிறார்.

**********

ஜே.பி.நட்டா

தேசிய அளவிலான முயற்சிகளாலும், பொதுமக்களின் பங்களிப்பாலும் போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாத நோயை முற்றிலும் அகற்றுவதில் இந்தியா வெற்றிகரமாக செயலாற்றி வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

வீடு வீடாக சென்று அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுவதை உறுதிசெய்து போலியோவை முற்றிலும் களைவதற்காக வெற்றிகரமாக செயலாற்றிய சுகாதார பணியாளர்களை அமைச்சர் பாராட்டினார்.

உரிய நேரத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி செலுத்தி, ஆரோக்கியமான போலியோ இல்லா எதிர்காலத்தை படைப்பதை மக்கள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு.நட்டா கேட்டுக்கொண்டார்.

**********

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை அடையாறு ஆறு, கடலில் கலக்கும் முகதுவாரத்தில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்தார்.

முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக சென்னையில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்காவை இன்று திறந்துவைத்தார்.

மாவட்ட சுகாதார அலுவலர்கள் பயன்பாட்டிற்காக 45 புதிய வாகனங்களின் சேவையையும் முதலமைச்சர் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

**********

**மருது சகோதரர்கள்**

மருது சகோதரர்களின் 224-ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மருது சகோதரர்களின் வீரம் செறிந்த வரலாற்றினை அடுத்த தலைமுறையினருக்கு அடையாளப்படுத்துவதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து போராடும் உணர்வை விதைத்த மருது சகோதரர்களின் உயிர் தியாகத்தை போற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அமைந்துள்ள மருது சகோதாரர்களின் மணிமண்டபத்தில் மாநில அமைச்சர்கள் திரு.ஐ.பெரியசாமி உட்பட அமைச்சர்கள் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

**********

**கே.என்.நேரு.**

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் தேங்கும் மழைநீரை உடனடியாக வெளியேற்ற ஆயிரத்து 436 மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

**********

**தஞ்சை மழை**

தஞ்சாவூர் மாநகராட்சி சார்பில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் தயார்நிலையில் இருப்பதாக மேயர் திரு.ராமநாதன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

**********

**வானிலை**

தென்கிழக்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெறக்கூடும் என்று இம்மையத்தின் இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

**அணைகள்**

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு** 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**ஒகேனக்கல்** காவிரி **ஆற்றிலும் நீர்வரத்து 65** ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ள நிலையில் அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**தேனி** மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை 14ஆவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

**தென்பெண்ணை** ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் ஆறுகளில் குளிக்கவோ, கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பவோ கூடாது என்று மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

**கரூர்** குளித்தலை அருகே மேட்டு மருதூர் கொடிங்கால் வாய்க்காலில் கன மழையால் நூற்றாண்டு பழமை வாய்ந்த கற்பாலம் சேதமடைந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைபகுதிகளில் தொடர் கனமழை காரணமாக கோதையாற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பரலியாறு, தாமிரபரணி, திற்பரப்பு அருவியில் குளிக்க தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் அபாய அளவையும் தாண்டி உயர்ந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளன.

**********

பொன்னுசாமி

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் சட்டப்பேரவை தொகுதி திமுக உறுப்பினர் பொன்னுசாமியின் இறுதிசடங்கு அவரது சொந்த ஊரான கொல்லிமலையில் முழு அரசு மரியாதையுடன் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

**********

இருவரி

ரயில் பயணத்தின்போது விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடி மீட்பு நடவடிக்கை தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி திருச்சி ரயில்வே குட்ஷெட் யார்டில் இன்று நடைபெற்றது.

தேசிய பேரிடர் மீட்பு படை, தீயணைப்பு, காவல், மருத்துவம், உள்ளிட்ட துறைகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர், முதலுதவி அளித்து மருத்துவ மனைக்கு கொண்டு செல்வது குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

**********

டென்னிஸ்

வியன்னா ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, ஸ்வீடனின் **Andre Goransson** இணை – குரேசியாவின் **Mate Pavic,** எல்-சால்வடாரின் **Marcelo** இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

## இளையோர் விளையாட்டு

பஹ்ரைனில் நடைபெறும் ஆசிய இளையோர் விளையாட்டு கபடி பிரிவின் ஆடவர் மகளிர் இரு பிரிவுகளிலும் இந்தியா தங்கம் வென்றுள்ளது.

இறுதி போட்டியில் மகளிர் அணி 75-21 என்ற புள்ளிகள் கணக்கிலும்,

ஆடவர் அணி 35-32 என்ற புள்ளிகள் கணக்கிலும் ஈரானை தோற்கடித்து தங்க பதக்கத்தை கைப்பற்றின.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********